**செய்தி வெளியீடு**

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள திருவள்ளுவர் விருது உள்ளிட்ட கீழ்க்காணும் விருதுகளைப் பெற்றிட தகுதியான பெருமக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**விருதுகள் பெறுவோர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவள்ளுவர் விருது – 2018 | : | **முனைவர் கோ. பெரியண்ணன்** |
| 2. | தந்தை பெரியார் விருது – 2017 | : | **திருமதி.பா.வளர்மதி** |
| 3. | அண்ணல் அம்பேத்கர் விருது – 2017 | : | **டாக்டர் சகோ.ஜார்ஜ், கே.ஜே** |
| 4. | பேரறிஞர் அண்ணா விருது – 2017 | : | **திரு. அ. சுப்ரமணியன்** |
| 5. | பெருந்தலைவர் காமராசர் விருது – 2017 | : | **திரு. தா.ரா.தினகரன்** |
| 6. | மகாகவி பாரதியார் விருது – 2017 | : | **முனைவர் சு. பாலசுப்ரமணியன் (எ) பாரதிபாலன்** |
| 7. | பாவேந்தர் பாரதிதாசன் விருது – 2017 | : | **திரு. கே. ஜீவபாரதி** |
| 8. | தமிழ்த்தென்றல் திரு. வி.க. விருது – 2017 | : | **எழுத்தாளர் திரு. வை. பாலகுமாரன்** |
| 9. | முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – 2017 | : | **முனைவர் ப. மருதநாயகம்** |

மேற்காணும் விருதுகளை திருவள்ளுவராண்டு 2049, தைத் திங்கள் 3ஆம் நாள், 16.01.2018 செவ்வாய்க் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் வழங்குகிறார்கள். விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் விருதுக்கான தகுதிச் சான்றிதழ் ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்படும்.

இவ்விழாவில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 50 பேருக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் உதவித்தொகை ரூ.2500/– மற்றும் மருத்துவப்படி ரூ.100/– பெறுவதற்கான அரசாணைகள் அளிக்கப்பெறும்.

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9**